புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# காளமேகரின் யமகண்டம்

முனைவர் கி. அய்யப்பன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
உ. நா. அரசினர் கல்லூரி,
பொன்னேரி- 601204

ஆய்வுச் சுருக்கம்

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் நினைத்ததும் பாடல்களைப் பாடக்கூடிய வல்லமை பெற்றவர். மிகச்சிறந்த புலவரான காளமேகம் நகைச்சுவையாகவும், சிலேடையாகவும் பாடல்களைப் பாடுவதில் வல்லவர். கார்மேகம் மழையைப் பொழிவதைப் போலப் பாடல்களைப் பாட வல்லவர் என்பதால் 'காளமேகம்' என்ற சிறப்புப்பெயரால் இவர் அழைக்கப்பட்டார். இவரின் சிறப்புகள் பலவற்றில் ஒன்று இவர் யமகண்டம் பாடிய புலவர் என்பது தான். யமகண்டம் என்பது உறியை மேலே கட்டி, கீழே தீ மூட்டி, எட்டுக் கத்திகளை ஒருவரின் மீது பாய்ச்சுவதற்கு யானைகள் துணையுடன் அமைக்கப்படும் அமைப்பாகும். இந்த அமைப்பை தலைக்கு மேல் கத்தி, உடலுக்கு கீழ் நெருப்பு எனச் சுட்டுகின்றனர். இந்த யமகண்டம் என்னும் அமைப்பு முறையில் பல்வேறு சமயங்களில் பாடகர்கள் தங்களுக்குள் போட்டியை வைத்துக் கொண்டு பாடியுள்ளார்கள். திருமலைராயன் பட்டினத்தை ஆண்ட திருமலைராயனும் அவரது அவைப்புலவர் அதிமதுரக்கவிராயர் உள்ளிட்ட 64 தண்டிகைப் புலவர்களின் முன்னிலையில் காளமேகப் புலவர் யமகண்டத்தில் பாடிய சூழலை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிச் சொற்கள்: காளமேகப் புலவர், யமகண்டம், திருமலைராயன் பட்டினம், அதிமதுரக்கவிராயர், மோகனாங்கி.

## முன்னுரை

தமிழுலகில் எண்ணிக்கையற்ற புலவர் பெருமக்கள் இனிமைத் தமிழுக்கு வளமை சேர்த்துள்ளனர். அவர்கள் ஆக்கியளித்துள்ள இலக்கியங்கள் உலகை வியக்கவைக்கும் அறிவுக்களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. அத்தகையோரின் ஆக்கங்களை அவ்வப்போது அறிஞர்களும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் எடுத்தாள்கின்றார்களே தவிர, அவர்களைப் பற்றியும், அவர்களின் ஆற்றல்களைப்பற்றியும் அறிந்தவர்களின் எண்ணிக்கை தமிழ் உலகத்திலே அருகிக்கொண்டே வருகின்றது. அத்தகைய அறிஞர்களிலே ஒருவர்தான் காளமேகப் புலவர். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர் ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி என்றெல்லாம் புகழ்பெற்றவர். நினைத்தவுடன் எதைப்பற்றியும் கவிதை பாடுவதில் வல்லவர்களே ஆசுகவி என்று அழைக்கப்படுவார்கள். அத்தகைய ஆசுகவிகவிகளிலே காளமேகப் புலவர் தன்னிகரற்ற பேராற்றல் படைத்தவராய் விளங்கினார். தமிழ்க் கவிதை மரபில் யமகண்டம் பாடும் ஒரு தனித்துவமான முறையை இவர் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கியங்களில் யமகண்டம் குறித்த பதிவுகள்

யமகண்டத்தினைப் பற்றி அபிதான சிந்தாமணியில் விரிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. "16 அடி நீள அகலமுள்ள குழி ஒன்று வெட்டி அக்குழியின் நான்கு மூலைகளினும் இருப்புக்

கம்பங்கள் நாட்டி அதன் மேல் 4 இருப்புச் சட்டங்கள் பரப்பி நடுவினும் சட்டமிட்டு நடுச் சட்டத்தில் உறிகட்டிக் குழியில் புளியந்தணலிட்டு இருப்புக் கொப்பரையில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி நிரப்பி, அவை கொதித்திருக்கையில் யானையைப் பாகருடன் நான்கு மூலையில் நிறுத்திப் பின் புறத்தில் வளையத்திற் சங்கிலிகோத்து எட்டுக் கத்திகளை யிடுப்பில் நாலும், கழுத்தில் நாலுங் கட்டிக்கொண்டு வளையத்திற் பொருத்திச் சங்கிலிகளை யானைத் துதிக்கையிற் கொடுத்து வைத்துக் கொப்பரைக்கு நடுவாகத் தொங்கு முறியில் புலவனிருந்து பல வித்வான்கள் கொடுத்த சமுசையைப் பாடுவது. அவ்வகை பாடானாயின் யானையைத் தூண்ட, யானை சங்கிலிகளை யிழுக்கப் புலவனுட லறுப்புண்டு கொதிக்கும் தீயில் விழுந்திறப்பன்; இதுவே யமகண்டம்''(பக்.1644-1645) என்று சிங்காரவேலு முதலியார் கூறுகிறார். இந்த யமகண்டத்தில் பாடியவர் காளமேகப் புலவர் என்பதாக அறியப்படுகிறது.

வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணம் எனும் நூலில், ஆறாவதாகப் புலமை இலக்கணம் அமைத்து அதில்,

''அட்டாவ தானம் எமகண்டம் மற்றோன்
கண்டதைப் பாடல் ஆதியில் கருதும்
தவம்முடி வதன்முன் சருவவொண் ணாதே''(அறுவகை இலக்கணம், 107)

என்ற செய்யுளில் புலவன் தன் அறிவு வன்மையை மட்டுமே பெரிதாக எண்ணித் தனக்கு இறையருள் முற்றிலும் எப்போதும் துணை செய்யும் என்னும் நிச்சயமான துணிவு ஏற்படுவதற்குமுன்னமேயே அட்டாவதானம், எமகண்டம், கண்டசுத்தி போன்ற ஆபத்தான துறைகளில் விளையாட்டாக ஈடுபடக் கூடாது என்று கூறுவதைக் காணமுடிகிறது. பின்னாளில் அபிராமி பட்டரும் நெருப்பின் மீது உறி கட்டி ஏறி நின்று அபிராமி அந்தாதி பாடி, அபிராமியின் அருளால் வென்றதையும் நீங்கள் அறிந்திருக்கலாம். இவை யாவும் தன் புலமையை, தன்னுடைய பக்தியை நிலைநாட்ட உருவானது என இலக்கியங்கள் கூறுகின்றன.

காளமேகப் புலவர் எழுதிய நூல்கள்

இவர் பாடிய பாடல்கள் தனிப்பாடல்கள் திரட்டில் உள்ளன. மற்றும் மக்கள் பலர் தன்னைச் சூழ்ந்துவர, தலைவன் உலாவருவதை வர்ணித்துக் கூறுவதாக அமைந்தது திருவானைக்காவுலா என்ற நூல். சித்திரமடல் என்பது காதல் தோல்வியடைந்த ஒருவர் தன்னை வருத்திக்கொள்வதான பொருளமைந்த நூல்.

காளமேகப்புலவர் வரலாறு

காளமேகப் புலவர் ஒரு தமிழ்ப் புலவர். கும்பகோணத்தில் பிறந்தவர். காளமேகம் என்பது இவருடைய இயற்பெயர் என்பது ஒரு சிலர் கருத்து. வேறு சிலரோ இவருடைய இயற்பெயர் வரதன் என்று நம்புகிறார்கள். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்த அந்தணர் ஆவார். மதுரைக்கு வடக்கே 12 கிமீ தொலைவில் அமைந்துள்ள திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். மூலவர் காளமேகப் பெருமாள் ஆவார். திருமோகூர் தலத்தின் மடப்பள்ளியில்(சமையல் கூடத்தில்) சமையல் கலைஞராகப் பணியாற்றிய ஒருவரின் மகனே காளமேகம் என்பது ஒரு சிலரின் கருத்தாகும். திருமோகூர் காளமேகப்பெருமாளைப் பற்றிக் காளமேகப் புலவர் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வரதன் தன் வாலிப வயதில் ஸ்ரீரங்கம் கோயிலில் சமையல் கலைஞராய் வேலையிலமர்ந்தார். ஸ்ரீரங்கம் கோயிலை அடுத்து காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருவானைக்காவல் என்னும் திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரி உடனாய சம்புகேசுவரர் கோயிலில் மோகனாங்கி என்ற தாசி குலத்தைச் சேர்ந்த இளம் பெண்ணொருத்தி சிவபெருமான் முன்பு ஆடியும் பாடியும் சிவத்தொண்டு செய்து வந்தாள். வரதன் மோகனாங்கியைக் கண்டதும் மையல் கொண்டார். அவளுக்கும் வரதன் மீது காதல் இருந்தது. அவள் சைவ சமயத்தைச் சேர்ந்தவள். வரதன் ஒரு வைணவன். அது ஒரு மார்கழி மாத முன்னிரவு. சம்புகேசுவரர் கோயிலில் தாசிகள் ஒன்றிணைந்து மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலுள்ள பதிகங்களை இறைவன் முன் பாடிக்கொண்டிருந்தனர். அதில் ஒரு பதிகம் இது.

''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்

*<u>எம்கொங்கை நின்அன்பர் அல்லாற் தோள் சேரற்க</u>*
*<u>எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க</u>*
*கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க*
*இங்குஇப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்*
*எங்கெழில் என் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்" (திருவெம்பாவை, 19)*

*அடிக்கோடிட்டுக் காட்டிய வரிகளைப் பாடுவதற்கு மோகனாங்கி சற்று திணறினாள். அவள்தான் ஒரு வைணவன் பால் மையல் கொண்டுள்ளாளே. மோகனாங்கி சம்புகேசுவரர் கோயிலில் பாடும்போது மற்ற தாசிகள் பரிகாசம் செய்தார்கள். வைணவனை மோகித்துவிட்டு சிவன் கோயிலில் பாட்டுப் பாடுவது பற்றித்தான் இந்தப் பரிகாசமே. மோகனாங்கிக்கு இந்தப் பரிகாசம் கோபத்தைக் கிளறிவிட்டது. வரதன் மோகனாங்கியைச் சந்தித்தபோது அவனை வீட்டுக்கு வெளியே நிறுத்திவைத்து 'நம் காதல் நிறைவேற வேண்டுமென்றால் சிவதீட்சை வாங்கி சைவனாக மாறிவிடு" என்று வற்புறுத்துகிறாள்.' வரதனும் மோகனாங்கி மேலிருந்த மோகத்தால் சம்புகேசுவரர் கோயிலில் சிவதீட்சை பெற்று சைவனாக மாறினான்.*

*வரதன் – காளமேகப் புலவராகுதல்*

*வரதன், சம்புகேசுவரர் கோயிலில் உள்ள மடப்பள்ளியில் சமையல்காரனாகச் சேர்ந்துவிடுகிறான். இருவரும் மனமொத்து வாழ்ந்து வந்தனர். சம்புகேசுவரர் கோயிலில் ஒரு நாள் வரதன் மடப்பள்ளியில், தன் வேலையெல்லாம் முடித்துவிட்டு, மோகனாங்கிக்காகக் காத்திருக்கிறான். மோகனாங்கியிடம் 'நீ கோவிலில் உன் வேலையெல்லாம் முடித்தபின்பு வீட்டிற்குப் போகும்போது என்னை எழுப்பு. நாம் இருவரும் சேர்ந்தே வீட்டிற்குப் போகலாம்' என்று சொல்லிவிட்டு கோயில் பிரகாரத்தில் உள்ள திண்ணையில் படுத்துத் தூங்கிவிடுகின்றான். மோகனாங்கியும் இருட்டில் ஒரு ஓரமாக அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த வரதனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் போகவே, வீட்டிற்குச் சென்றுவிடுகிறாள். இதே சம்புகேசுவரர் கோயிலில் மற்றொரு அந்தணன் சரஸ்வதி தேவியின் மீது பக்தி செலுத்தி வந்தான். இவன் சரஸ்வதி தேவியை நோக்கி நீண்ட நாட்களாகத் தவமியற்றியும் வந்தான். இவன் தவத்தில் அகமகிழ்ந்த சரஸ்வதி தேவியே சிறு பெண்ணாக உருவெடுத்து தன் பக்தனின் பக்தியைச் சோதிக்க எண்ணி, வாய் நிறைய வெற்றிலை பாக்கைக் குதப்பியபடி கோயிலுக்குள் வலம் வந்தாள். கோயிலில் படுத்திருந்த சிவபக்தனிடம் சென்று: 'வாயைத்திற உன் வாயில் நான் துப்புகிறேன்' என்று சொல்லியிருக்கிறாள். அந்தணனோ கோபத்தின் உச்சிக்கே சென்று தன் வாயில் வெற்றிலையை வாங்க மறுத்து விடுகிறான். வெற்றிலையைத் தன் வாயில் குதப்பியபடிவந்த சரஸ்வதி தேவி, வரதன் அருகே சென்று அவன் வாயைத் திறக்கச் சொல்லி வெற்றிலையை உமிழ்வதாகச் சொல்கிறாள். வரதன் சரஸ்வதி தேவியை மோகனாங்கி என்று எண்ணிக் கொள்கிறான். மோகனாங்கி சொல்வதைச் செய்யவில்லை என்றால் அவளுக்குக் கோபம் வந்துவிடுமே என்று அஞ்சி வாயைத் திறக்க அவன் வாயினுள் சரஸ்வதி தேவி வெற்றிலையை உமிழ்கிறாள். அன்று முதல் சரஸ்வதி தேவியின் அனுக்கிரகத்தால் வரதன் கல்லாமலே புலமை பெற்று கவி மழை பொழியத் துவங்கினான். கவி காளமேகம் என்று பெயரும் பெற்றான்.*

*நாகபட்டினத்தை அடுத்த திருமலைராயன் பட்டிணத்தை விஜயநகர அரசப் பிரதிநிதியான சாளுவத் திருமலைராயன் (கி.பி 1455 – 1468) அரசாண்டு வந்தான். இவன் விஜயநகர மன்னன் மல்லிகார்ஜுன ராயர் (கி.பி. 1455 – 1468) என்னும் மூன்றாம் தேவராயரின் பிரதிநிதியாவான். திருமலைராயன் பட்டினம் என்பது 'சுங்கத் தவிர்த்த சோழநல்லுனரான திருமலை ராசபுரமே' என்பது பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்களின் கருத்தாகும். திருமலைராயன் குறித்துக் கல்வெட்டுகள் தரும் சான்றுகளின் அடிப்படையில் காளமேகப் புலவர் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். இந்தத் தெலுங்கு மொழி சிற்றரசனின் அரசவையில் 64 புலவர்கள், தண்டிகைப் புலவர்கள் என்ற சிறப்பினைப் பெற்றுத் திகழ்ந்தனர். தங்கள் புலமையின் செருக்கில் அரசனிடம் பரிசில் பெற எண்ணி திருமலைராயனின் அவைக்கு வரும் புலவர்களையெல்லாம் தந்திரமாக மடக்கி, அவர்களுக்கு அவமானத்தையும் தலைகுனிவையும் ஏற்படுத்தி வந்தனர். அதிமதுரக் கவிராயர் இந்தத் தண்டிகைப் புலவர்களின் தலைவராவார்.*

*காளமேகப்புலவர் பாடல்வழி சொன்ன பதில்,*

*"தூதஞ்சு நாளிகையில் ஆறுநாளிகைதனில்*
*சொற்சந்த மாலை சொல்லத்*
*துகளிலா வந்தாதி யேழுநாளிகை தனில்*
*தொகைபட விரித்து ரைக்கப்*
*பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ளிகைதனில்*
*பரணியொரு நாண்முழுவ தும்*
*பாரகா வியமெலா மோரிரு தினத்திலே*
*பகரக்கொ டிக்கட்டி னேன்*
*சீதஞ்செ யுந்திங்கண் மரபினான் நீடுபுகழ்*
*செய்யதிரு மலைரா யன்முன்*
*சீறுமா றென்றுமிகு தாறுமா றுகள்செய்*
*திருட்டுக் கவிப் புலவரைக்*
*காதங்கு அறுத்துச் சவுக்கிட்டு அடித்துக்*
*கதுப்பிற் புடைத்து வெற்றிக்*
*கல்லணையி னொடுகொடிய கடிவாள மிட்டேறு*
*கவிகாள மேகம் நானே" (காளமேகப்புலவர் தனிப்பாடல்கள், பா.4)*

*காளமேகம் தம் பாடலில் தான் யாரென்பதையும், தனது புலமை என்னவென்பதையும் சற்றுத் திமிருடன் எடுத்துரைத்த பாடல் இதுவாகும். அவையில் மன்னன் திருமலைராயனைப் புகழ்ந்து விதந்துரைக்கின்றார். தண்டிகைப் புலவர்களை 'தாறுமாறுகள் செய்யும் திருட்டுப்புலவர்கள்' என்று இகழ்ந்து பாடுகிறார். இவர்களைச் சவுக்கால் அடித்து, செவிகளை அறுத்து, கன்னங்களைச் சிதைத்து, கல்லோடு பிணைத்துக் கடிவாளத்தோடு இணைத்து அவர்கள் மீது ஏறிச் சவாரிசெய்யப்போகின்ற கவிஞராகிய காளமேகம் நானே என்று சற்று கர்வத்துடன் பாடிய பாடல் இதுவாகும்.*

*கவித்திறமையால் அரியாசனத்தில் அமர்ந்த காளமேகப் புலவர்*

*திருமலைராயனோ காளமேகம் தன்னைப் புகழ்ந்து பாடியதைப் பொருட்படுத்தாமல் தண்டிகைப் புலவர்களை ஏளனம் செய்து பாடி அவமதித்த காளமேகத்தின் செருக்கை அடக்க எண்ணினான். காளமேகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தவேண்டும் என்பது அவன் திட்டம். கவி காளமேகத்திற்கும் அதிமதுரக் கவிராயருக்கும் இடையே போட்டியொன்றை ஏற்பாடு செய்தான். அறுபத்து நான்கு தண்டிகைப் புலவர்களின் உதவிபெற்று அதிமதுரக் கவிராயர் இந்தப் போட்டியில் திண்ணமாக வெற்றிபெறுவார் என்று மன்னன் திடமாக நம்பினான்.*

*அதிமதுரகவி தனது 64 தண்டிகைகாரரையும் நோக்கி அந்தக் காளமேகம் இங்கு வந்தாலும் வரலாம். அவரை அரசனை நெருங்க வழி விடாதபடி சுற்றி அரண் அமைத்து அமருங்கள் என்று கட்டளையிட்டார். திருமலைராயன் அரசவையில் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கப் புயலெனக் காளமேகம் அங்கு வந்தார். தன்னை அரசனிடம் போக விடாதபடி செய்யப்பட்ட சூழ்ச்சியைக் கண்டார். ஒரு எலுமிச்சம்பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு அதை மன்னனுக்கு நேரே நீட்டி ஸ்வஸ்தி சுலோகம் ஒன்றைக் கூறலானார். பிராமணர் ஒருவர் வாழ்த்திக் கூறும் ஸ்லோகத்தையும் அவர் தரும் எலுமிச்சையும் ஒரு மன்னன் நிச்சயம் வாங்க வேண்டும் என்ற விதிமுறையால் மன்னன் தானே வந்து அதை வாங்கிக் கொண்டான். ஆனால் கவிஞரை அமரச் சொல்லவில்லை. நேராக மனதிற்குள்ளாகவே அகிலாண்டேஸ்வரி விமானத்தைத் தரிசித்து அன்னை சாரதை தேவியை மனக் கண்ணில் ஏற்றி, அவர் பாடினார்:*

*"வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு*
*வெள்ளைக் கமலத்து வீற்றி ருப்பாள் - வெள்ளை*
*அரியாசனத்தி னரசரோடென்னைச்,*
*சரியாசனத்து வைத்த தாய்"(காளமேகப்புலவர் தனிப்பாடல்கள், பா.2)*

*இந்தப் பாடலைக் கூறியவுடன் அன்னை மனம் கனிந்தாள். அரசனது அரியாசனம் ஒரு பக்கமாக வளைந்து இடம் கொடுத்தது. அதில் அமர்ந்தார் கவி காளமேகம்.*

*கவி என்றால் குரங்கு*

*காளமேகப்புலவர் அரியாசனத்தில் அமர்ந்ததைப் பார்த்து அதிமதுரக் கவிராயர் திகைக்க, காளமேகம் அதிமதுரக்கவிராயரை நோக்கி, 'நீங்கள் யார்?' என்றார். 'நானா! என்னையா*

*கேட்கிறாய்? நான் கவிராஜன்' என்று கர்வத்துடன் பதில் கூறினார் அதிமதுரக்கவிராயர். அதற்கு காளமேகம், கவி என்பதற்கு குரங்கு என்று பொருள் கொண்டு அவரைக் கிண்டலடித்தார். மேலும், 'கவி ராஜன் என்கிறாயே! உனது வால் எங்கே? நாலு கால் எங்கே? ஊன் வடிந்த கண்ணெங்கே' என்ற பொருள்பட பாடல் ஒன்றைப் பாடினார்:*

*"வாலெங்கே, நீண்டெழுந்த வல்லுயிரெங்கே நாலு*
*காலெங்கே யூன் வடிந்த கண்ணெங்கே - சால*
*புவிராயர் போற்றும் புலவீர்கா னீங்கள்*
*கவிராய ரென்றிருந்தக் கால்"(காளமேகப்புலவர் தனிப்பாடல்கள், பா.10)*

*கோபம் கொண்ட அதிமதுரக் கவிராயர், 'நீர் கவி காளமேகம் என்றால், அரிகண்டம் பாடுவீரா?' என்று கேட்டார். 'அரிகண்டம் என்றால் என்ன?' என்று எதிர்க்கேள்வி கேட்டார் காளமேகம்.*

*"கழுத்திலே கத்தியைக் கட்டிக் கொள்ள வேண்டும். எதிரி கொடுக்கும் சமிசைக்கு இணங்க உடனடியாகப் பாடவேண்டும். அப்படிப் பாடுவது தான அரிகண்டம். உன்னால் முடியுமா? பாடத் தயாரா?" என்றார் அதிமதுரக் கவி. பயந்து ஓடி ஒளிவார் காளமேகம் என்று எதிர்பார்த்த அதிமதுரக் கவிக்கு அதிர்ச்சி தான் காத்திருந்தது. காளமேகமோ, 'பூ! இவ்வளவு தானா! நான் யமகண்டமே பாடுவேன். நீங்கள் பாடத் தயாரா?' என்றார். யமகண்டம் என்றால் என்ன என்று தெரியாத அதிமதுரகவி யமகண்டம் என்றால் என்ன என்று கேட்டார்.*

*யமகண்டம் பாடிய காளமேகம்*

*தமிழர் பண்பாட்டில் "நவகண்டம், அரிகண்டம் குறித்து இலக்கிய குறிப்புகள், நடுகற்கள் நிறைய உண்டு. யமகண்டம் எனும் ஒரு வழக்கம் இருந்தது என்பதைக் காளமேகப் புலவரின் கூற்றின் வழி அறியமுடிகிறது."(ப.71) என்று பார்த்திபன் கூறுகிறார். யமகண்டம் என்பது குறித்து காளமேகப்புலவர், பூமியில் பதினாறு அடி நீளம், பதினாறு அடி அகலம், பதினாறு அடி ஆழம் கொண்ட ஒரு குழியை வெட்ட வேண்டும். அதன் நான்கு மூலைகளிலும் பதினாறு அடி இரும்புக் கம்பங்களை நாட்ட வேண்டும். கம்பத்தின் மேல் நான்கு பக்கத்திலும் இரும்பினால் செய்த நான்கு சட்டங்களை அமைக்க வேண்டும். அதன் நடுவிலே ஒரு சட்டம் பொருத்த வேண்டும். நடுச் சட்டத்தில் உறி கட்ட வேண்டும். குழிக்குள்ளே பருத்த புளியங்கொட்டைகளை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்பு மூட்ட வேண்டும். அது கனன்று எழுந்து ஜுவாலையுடன் எரியும் போது, அந்த நெருப்பில் ஒரு ஆள் உயரமுள்ள இரும்புக் கொப்பரை ஒன்றை வைக்க வேண்டும்.*

*கொப்பரையை எண்ணெயால் நிரப்ப வேண்டும். அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி ஆகியவற்றை இட்டு நிரப்பி அவை நன்றாகக் காயும்படி செய்ய வேண்டும், அவை காய்ந்து உருகிக் கொதித்துக் கொண்டிருக்க, அப்போது, நான்கு யானைகளைப் பாகர்கள் மதம் ஏற்ற வேண்டும். அவற்றைக் கம்பத்திற்கு ஒன்றாக மலைகளைப் போல நிறுத்தி வைத்திருக்க, பின்புறத்தில் வளையம் வைத்து, வளையத்தில் சங்கிலி கோர்த்து, எஃகினால் கூர்மையாக சமைக்கப்பட்ட பளபளவென்று மின்னும் படி சாணை பிடிக்கப்பட்ட எட்டுக் கத்திகளை, கழுத்தில் நான்கும், அரையில் நான்குமாகக் கட்டிக் கொண்டு, கத்திகளின் புறத்தில் உள்ள சங்கிலிகளை நான்கு யானைகளின் துதிக்கையில் கொடுத்து வைத்து, தான் கொப்பரைக்கு நேராகத் தொங்குகின்ற உறி நடுவில் ஏறி, எவரெவர் என்னென்ன சமிசை கொடுத்தாலும் அவற்றை அரை நொடிக்குள் தடையின்றிக் கேட்டவர் குறித்த கருத்து வரும்படி பாட வேண்டும், அப்படிப் பாடும்போது வழு ஏற்படுமானால், சமிசை கொடுத்தவர்கள் யானை மேலிருக்கும் பாகர்களுக்கு கண் சைகை காட்ட, அவர்கள் யானைகளின் மத்தகத்தில் அங்குசத்தால் குத்தி அதட்ட, அவைகள் தமது தும்பிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை விசையுடன் வேகமாக இழுக்க, அப்படி இழுத்தவுடன் புலவன் கழுத்தும், அரையும் கத்திகளால் துண்டிக்கப்பட்டு தலை ஒரு துண்டமாகவும், அரை முதல் கால் வரை ஒரு துண்டமுமாகி கொதிக்கின்ற எண்ணெய் கொப்பரையில் விழும். இப்படி விழுந்து மாண்டு போவது தான் யமகண்டம்.*

*கோரமான இந்த யமகண்டத்தைக் கேட்ட அதிமதுரக் கவிராயரும், 64 தண்டிகைகாரர்களும், திருமலைராயனும், கூடியிருந்த மக்களும் திகைத்துப் போயினர். திடுக்குற்ற அதிமதுரக் கவி, 'இதைச் சொன்ன நீரே செய்து காண்பியும்' என்று சவால் விட சவாலை ஏற்ற கவி காளமேகம் மேகமெனக் கேட்ட கேள்விக்கெல்லாம் கவி மழையாகப் பதில் அளித்தார். கடினமாகக் கொடுக்கப்பட்ட கவிதைப் புதிர்களை எதிர் கொண்டார். 64 தண்டிகைகாரர்களும்*

அயர்ந்து போக, மன்னன் பிரமிக்க, அதிமதுரக் கவி திகைக்க காளமேகம் பாடிய பாடல்கள் ஒரு தனி வரலாறையே படைத்தன.

மணல் மேடான திருமலைராயன் பட்டினம்

காளமேகம் தன் பாக்களால் பாடி வென்றார். பிறகும் கூட புலவர்களோ மன்னனோ இவரை மதிக்கத் தவறிவிட்டார்கள். ஆத்திரமடைந்த காளமேகம் அந்த ஊரே அழிந்து போகும்படி அறம்பாடினார்.

"கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்ற ஊர்
களைகளாய் நின்று கதறும் ஊர்— நாளையே
விண்மாரியற்று வெளுத்து மிகக் கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்"(காளமேகப்புலவர் தனிப்பாடல்கள், பா.12)

கவி காளமேகம் அறம் பாடியதால் அவ்வூர் மண்மாரி பெய்து அழிந்தது. காளமேகம் ஊர் திரும்பினார். அந்த திருமலைராயன்பட்டினம் கவி காளமேகத்தின் கோபத்தால் மண்மேடிட்டு அழிந்து போயிற்று. இந்த திருமலைராயன் பட்டினம் என்பது காரைக்கால் நாகப்பட்டினம் மார்க்கத்தில் இருக்கும் ஒரு கடற்கரை கிராமமாக இப்போது இருக்கிறது.

முடிவுரை

இக்கட்டுரையின் வாயிலாக யமகண்டம் என்பதற்கான விளக்கத்தையும், அதைப் பாடியவர் காளமேகப் புலவர் என்பதையும், மேலும் அவரின் வாழ்வியலையும், இலக்கிய புலமையையும் அறிந்துகொள்ள முடிகிறது. காளமேகப் புலவரின் புகழ் காலத்தால் மறையாது நிலைத்திருப்பதற்கு அவர் பாடிய தனிப்பாடல்களே பெரிதும் காரணமாகும். வசைபாடக் காளமேகம் என்று புலவர் பெருமக்களால் போற்றப்பட்ட காளமேகப் புலவரின் பாடல்கள் அத்தனையும் படிக்கப் படிக்க இன்பம் தருவன. நினைக்க நினைக்க மகிழ்ச்சி கொடுப்பன. கற்பனைக்காகக் கூட உலகில் எந்த ஒரு நாட்டிலும் இப்படி ஒரு புலவர் பாடியதாகக் கற்பனை கதை கூடக் கிடையாது. ஆனால் நம்மிடமோ கவி காளமேகத்தின் அற்புதமான பாடல்கள அனைத்தும் உள்ளன. கொடுத்து வைத்தவர்கள் தமிழர்கள். இந்தக் காலத்திலும் அவரின் பாடல்கள் நிலைத்து நிற்கின்றன. காளமேகம் யமகண்டம் பாடி அரங்கேறிய பாடல்கள் காலத்தை வென்றவை; அவை கவிஞரின் புகழை மட்டும் நிலை நிறுத்தவில்லை; தண்டமிழின் பெருமையையும் உயரத்தில் ஏற்றிக் காத்து வருகின்றன.

துணைநூற் பட்டியல்


- சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, சீதை பதிப்பகம், சென்னை, 2012.
- தண்டபாணி சுவாமிகள், வண்ணச் சரபம்., அறுவகை இலக்கணம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், 1978.
- பார்த்திபன், வே., கல்லாகிப் போனவர்கள், ஆதிவனம் பதிப்பகம், ஈரோடு, 2023.
- புலியூர் கேசிகன்(உரை), காளமேகப் புலவர் தனிப்பாடல்கள், மங்கை வெளியீடு, சென்னை, 2010.
- ஸ்ரீதயாளன், M.S (விளக்கவுரை), திருவெம்பாவை, காயத்திரி பப்ளிகேஷன், இலங்கை, 2009.


********* ********* ********** ********* ********* ********** ********** **********